**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 392/2017**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வைகுண்டராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | ராமச்சந்திரபட்டணம் | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி ஆஜரில்லை. 205 Crpc மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் ராமச்சந்திரபட்டணத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. 2017 ம் ஆண்டு ஒருநாள் கோவில் திருவிழாவிற்காக ராமச்சந்திரபட்டணம் ஊருக்கு மேற்கேயுள்ள தோட்டத்தில் வாழை வெட்ட சென்றோம். அப்போது ெஹல்மேட் போட்டு வந்த ஒரு நபர் தகாத வார்த்தைகளினால் திட்டினார். நாங்கள் சென்ற டாடா ஏசி வண்டியின் டிரைவர் மாரியப்பனின் சட்டையை பிடித்து இழுத்து, சாவி பிடுங்கி கொண்டு சென்றார். அவர் யாரென்று எனக்கு தெரியாது. பின்னர் ஊர்அறங்காவலரிடம் சொல்லி சாவியை பெற்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.03 19:20:35 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No. 392/2017</u>**
**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமசிவம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | காளிமுத்து | தொழில் | : | எலக்ட்ரிசியன் |
| கிராமம் | : | ராமச்சந்திரபட்டணம் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி ஆஜரில்லை. 205 Crpc மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ராமச்சந்திரபட்டணத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். எதிரி என்னால் பார்த்தால் சொல்ல முடியும். (எதிரி ஆஜரில்லை). 2017 ம் ஆண்டு ஒருநாள் கோவில் திருவிழாவிற்காக தென்காசிபட்டணத்தில் பூமாலை என்பவரின் தோட்டத்தில் வாழை வெட்ட சென்றோம். அப்போது ெஹல்மேட் போட்டு வந்த ஒரு நபர் தகாத வார்த்தைகளினால் திட்டினார். நாங்கள் சென்ற டாடா ஏசி வண்டியின் டிரைவர் மாரியப்பனின் சட்டையை பிடித்து இழுத்து, சாவி பிடுங்கி கொண்டு சென்றார். அவரின் பெயர் காந்திசெல்வன் என்று எனக்கு பின்னர் தெரிந்தது. நாட்டாமை சுப்பிரமணியன் என்ற ஆத்தியப்பன் சாவியை வாங்கிக்கொண்டு வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

எதிரியின் பெயர் போலீசார் சொன்னார்களா? என்றால் இன்றைய தினம் போலீசார் எதிரியை காண்பித்தார்கள். ஒரு வருடத்திற்கு முன்பு

பஞ்சன் வீட்டிற்கு போய்விட்டு வரும்போது ஊரில் உள்ள நாட்டாண்மை எனக்கு காந்திசெல்வன் என்று எதிரியை காண்பித்தார். அதற்கு முன்னர் எனக்கு எதிரியை தெரியாது என்றால் சரிதான். பால்ச்சாமி என்பவருக்கு காந்திசெல்வன் என்பவர் மீதுள்ள விரோதத்தின் காரணமாக பால்ச்சாமியின் தூண்டுதலின் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.03 19:20:42 +0530